வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 | 28.02.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 59 | பக்கங்கள் : 12




# குற்றவியல் நீதி குறித்து ஜெனிவாவில் அரசாங்கம் எதனையும் கூறவில்லை!

## கஜேந்திரகுமார் எம். பி. குற்றச்சாட்டு



கொழும்பு, பெப்ரவரி 28

**ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தைகூட அவர் கூறவில்லை. யுத்த சம்பவத்தில் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. அதைத் தவிர, அனைத்தையும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். முறைமை மாற்றம் என்று கூறிக்கொண்டு வந்த இந்த அரசாங்கமும் பழைய எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளது.**

- இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் நடந்த விவாதத்தில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த பாராளுமன்ற விவாதத்திலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயல்பாடுகள் - அதன் நம்பகத்தன்மை தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன். அந்த ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் சில உறுப்பினர்கள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்தபோது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் சந்தித்ததுடன், கொழும்புக்கு வந்ததும் அது தொடர்பில் அறிக்கையும் வெளியிட்டிருந்தனர். அந்த அறிக்கையில் இருந்த விடயங்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை . பாதிக்கப்பட்ட தரப்பினர் நஷ்டஈட்டுக்கு இணக்கம் தெரிவித்திருந்தனர் என்று கூறப்பட்டது. ஆனால், அது தவறான தகவலாகும்.

பொலிஸாரின் செயல்பாடுகளில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தலையிட வேண்டும்.

11



படம் – யாழ். போதனா மருத்துவமனை போராட்டம்

# நாடளாவிய ரீதியில் நேற்று தாதியர்கள் போராட்டம்!

கொழும்பு, பெப். 28

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடளாவிய ரீதியில் சகல அரச மருத்துவமனைகளின் தாதியர்களும் நேற்று வியாழக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள்பணியாற்றும் மருத்துவமனைகளின் முன்பாக நேற்று மதியம் சுமார் ஒரு மணி நேரம் தாதியர்களின் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

அரசாங்கத்தின் புதிய வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்ட போதிலும் மருத்துவ ஊழியர்களுக்கான சலுகைகள் மற்றும் மேலதிக சேவைக்கால கொடுப்பனவு என்பன குறைக்கப்பட்டுள்ளதாக்க் கூறியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-5)

# இந்திய மீனவர்களை கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று பேரணி!

- பு.கஜிந்தன் -





யாழ்ப்பாணம், பெப். 28

இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கையை கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை பேரணி ஒன்று நடைபெற்றது.

மீனவர்களின் போராட்டம் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களம் முன்பாக ஆரம்பமானது. அங்கிருந்து மீனவர்கள் பேரணியாக யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தை அடைந்தனர்.

மீனவர்களின் போராட்டம் காரணமாக இந்திய துணைத் தூதரகம் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தி வீதித் தடையையும் பொலிஸார் ஏற்படுத்தியிருந்தனர். இதையடுத்து, மீனவர்களின் 5 பிரதிநிதிகளை இந்திய துணைத் தூதரக அதிகாரிகளுடன் சென்று பேசுவதற்கு பொலிஸார் அனுமதித்தனர்.

அங்கு சென்ற மீனவர்களின்

11

# தமிழ் போராட்ட அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைத்தனவா?

## தயாசிறி ஜயசேகர கேள்வி

### பாதாள உலக குழுவிடம் உள்ளவை ஜே.வி.பியினரின் ஆயுதங்களா...?

கொழும்பு, பெப்.28

தமிழ் போராட்ட அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைத்தனவா? - விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டனவா என்று நேற்று பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார் தயாசிறி ஜயசேகர எம். பி.

அத்துடன், பாதாள உலகக் குழுவினரிடம் உள்ளவை மக்கள் விடுதலை முன்னணியினரின் (ஜே. வி. பி.) ஆயுதங்களா? அரச படைகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 2,136 ஆயுதங்களை அவர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

11

# எங்களிடம் தற்போது ஆயுதங்கள் இல்லை!

## தயாசிறிக்கு செல்வம் பதில்

கொழும்பு, பெப். 28

எங்களிடம் தற்போது ஆயுதங்கள் இல்லை. நாம் பயங்கரவாதத்துக்கு துணைபோகவில்லை - பாதாள உலகக் குழுவுடன் தொடர்பும் எமக்கு தொடர்பும் இல்லை என்று கூறியுள்ளார் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய தயாசிறி ஜயசேகர எம். பி., "ஈரோஸ், புளொட், ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ். போன்ற பல அமைப்புகளிடம் ஆயுதங்கள் இருந்தன. இந்த ஆயுதங்கள் இது வரை ஒப்படைக்கப்பட்டனவா என்று நாம் பார்க்கவேண்டும்"

11

# மனிதாபிமானமற்ற முறையில் சிறையில் நான் நடத்தப்பட்டேன்!

## ஞானசார தேரர் சொல்கிறார்

- வீட்டு உணவுக்கு அனுமதியில்லையாம்

கொழும்பு, பெப். 28

சிறையில் தண்டனை அனுபவித்த காலத்தில் நான் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டேன். மருத்துவர்கள் பரிந்துரைத்தும்கூட வீட்டில் தயாரித்த உணவை வழங்குவதற்கு சிறை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை - இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

11

# 25 இலட்சம் இலங்கையர்கள் கண் தானம் செய்ய ஆர்வம்!

கொழும்பு, பெப். 28

25 இலட்சம் இலங்கையர்கள் மரணத்துக்கு பின்னர் தங்கள் கண்களை தானம் செய்வதில் ஆர்வம் செலுத்தியுள்ளனர். இது கண் தான முயற்சியை ஆதரிப்பதில் முக்கிய மைல்கல் என்று இலங்கை கண் தான சங்கம் தெரிவித்துள்ளது.

57 நாடுகளின் 114 நகரங்களை சேர்ந்த பார்வையற்றோருக்கு பார்வை பெற உதவ கண் கருவிழிகளை அனுப்பி வருவதாக இலங்கை கண் தான சங்கத்தின் மூத்த முகாமையாளர் ஜனத் சமன்

11

# அரியாலை புதைகுழி வழக்கு; நீதிமன்றில் இன்று விசாரணை!

யாழ்ப்பாணம், பெப். 28

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கு இன்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படுவதாக இருந்தது. நீதிமன்றுக்கு நீதிவான் சமுகமளிக்காதமையால் வழக்கை விசாரித்த பதில் நீதிவான் வழக்கை இன்றைய தினத்துக்கு ஒத்தி வைத்தார்.

முன்னதாக, அரியாலை சித்துப்பாத்தி

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜப்பானுக்கு வருமாறு அநுரவுக்கு அழைப்பு!

## முதலீடு குறித்தும் உத்தரவாதம்

கொழும்பு, பெப். 28

**இலங்கையில் துறைமுகம் சார்ந்த திட்டங்கள் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்களுக்கு முதலீடு செய்ய ஜப்பானிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.**

ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறும் ஜப்பான் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் இசொமதா அகியோவுக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

ஜப்பானிய அரசாங்கம் அண்மையில் ஆரம்பித்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உதவித் திட்டத்தில் இலங்கையையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக இசொமதா அகியோ தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்தில் தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக ஜப்பான், சுவிட்சர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் தூதுவர், ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினார்.

டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் விமான நிலைய முதலீடுகளின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

விரைவல் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு ஜப்பானிய தூது வர் இசொமதா அகியோ ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

(அ)

# நேர்மையான அரச சேவைக்காக அதிகாரிகள் அணி திரளவேண்டும்

## ஜனாதிபதியின் செயலாளர் அழைப்பு

கொழும்பு, பெப். 28

நேர்மைத்திறனான அரச சேவைக்காக அணி திரளவேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சனத் குமாநாயக்க அனைத்து அரச அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டின் அரசியல் முறைமை மற்றும் அரச சேவை மாற்றம் அடைய வேண்டும் என்று மக்கள் முடிவு செய்துள்ளதாகவும், அதற்கேற்ப அரசியல் முறைமையை மாற்ற, மாற்று சக்தியொன்றை தேர்ந்தெடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஊழலுக்கு எதிராக மக்களை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற செயலமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்த உள்நாட்டு அலுவல்கள் பிரிவு மற்றும் ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் மதிப்பீடு குறித்த செயலமர்வு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

"ஊழலுக்கு எதிராக மக்களை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் அரச அதிகாரிகளுக்கு குறித்த செயலமர்வு நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதியின் செயலாளர், மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவது மக்கள் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதால், அந்த நோக்கத்திற்காக நடைமுறைச் செயல்பாட்டில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை இந்த செயலமர்வு வலியுறுத்துகிறது என தெரிவித்தார்.

அதன்படி, நேர்மைத்திறனான அரச சேவைக்காக அணி திரளவேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து அரச அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்த செயலமர்வில் பொது மக்களுடன் நேரடியாக பணியாற்றும் நிறுவனங்கள் என்ற அடிப்படையில் 25 மாவட்ட செயலகங்கள், 09 மாகாண செயலகங்கள், 24 அமைச்சுகள் மற்றும் 43 திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகள் பங்கேற்றனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆர்.எஸ்.ஏ.திசாநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திமா விக்ரமசிங்க, மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட, மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் அதிகாரிகளும் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர். (அ)



# எகிப்து நாட்டுத் தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 28

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் எகிப்து தூதுவர் ஆதில் இப்ராஹிம் அஹமட் இப்ராஹிம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை மற்றும் எகிப்துக்கு இடையில் நீண்ட காலமாகக் காணப்படும் நட்புறவை பலப்படுத்துவது தொடர்பிலும் இரு நாட்டு சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறைகளில் காணப்படும் பிரச்னைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் மத்திய கிழக்கு வலயத்தின் தற்போதைய நிலைமை குறித்தும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

இதில் ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, எகிப்து அரபு குடியரசு தூதரகத்தின் ஆலோசகர் மொஹமட் மாதி ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர். (அ)

# ஜனாதிபதிகள் மேற்கொண்ட வெளிநாட்டு பயணச் செலவு விவரங்கள் வெளியாகின!

கொழும்பு, பெப். 28


முன்னாள் ஜனாதிபதிகள் வெளிநாட்டுப் பயணங்களுக்காக செலவிடப்பட்ட பணம் குறித்து பிரதமர் விசேட அறிவிப்பை வெளியிட்டார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போதே அவர் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டார்.

அந்தவகையில் மகிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு முதல் 2014 வரை - 3,572 மில்லியன் ரூபாவையும், மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரை 384 மில்லியன் ரூபாவையும், கோட்டாபய ராஜபக்ஷ 2020 ஆம் ஆண்டு முதல் 2022 வரை 126 மில்லியன் ரூபாவையும்,ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டுக்கு இடையில் 533 மில்லியன் ரூபாவையும், அநுரகுமார திஸாநாயக்க கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் பெப்ரவரி 2025 வரை 1.8 மில்லியன் ரூபாவையும் செலவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் கடந்த 2013 ஆம் ஆண்டில் அதிக செலவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது 1,144 மில்லியன் ரூபா எனவும் பிரதமர் தெரிவித்தார். (அ)

# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியுடன் அமைச்சர் சந்திரசேகர் சந்திப்பு



கொழும்பு, பெப். 28

கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகருக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரே பிரெஞ்சுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பு கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

இதில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய திட்டத்தின் உதவி பிரதிநிதி நளின் முனசிங்க, உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கடற்றொழில்சார் நிபுணர் பாலித கித்சிறி ஆகியோரும் பங்கேற்றனர்.

இலங்கையின் கடற்றொழில் துறைக்கும், கடல் வளங்களை பாதுகாப்பதற்கும், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் துணை அமைப்புகளால் வழங்கப்பட்டு வரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு தொழில்நுட்பம் உள்ளிட்ட உதவிகள் தேவை என கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் கடற்றொழிலாளர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் தெளிவுபடுத்தினார். (அ)

# இராமேஸ்வரம் மீனவர் தொடர் உண்ணாவிரதம்

## கைதான மீனவரை விடுவிக்கக் கோரி

சென்னை, பெப். 28

இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை படகுகளுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி இந்தியா தமிழ்நாடு இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளனர்.

நேற்று இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மீன்வளத்துறை வட்டாட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் போராட்டத்தைக் கைவிடக் கோரி மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்த நிலையில் தங்கச்சிமடத்தில் இன்று முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்க மீனவர்கள் தீர்மானித்துள்ளனர். (அ)

# ரவூப் ஹக்கீம் - பிமல் ரத்நாயக்க சபையில் கடும் வாக்குவாதம்!

கொழும்பு, பெப். 28

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் நேற்று பாராளுமன்றத்தில் வாக்கு வாதம் இடம்பெற்றது.

தன்னை நிதிக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள விடாமல் அமைச்சர் பிமல் ரட்நாயக்க தடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தினார்.



ஜனாதிபதி தன்னை நிதிக்குழுவில் இணைத்துக் கொள்ளவதாக உறுதியளித்திருந்தார் என சுட்டிக் காட்டிய ரவூப் ஹக்கீம்,

ஜனாதிபதி உறுதியளித்தும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு தனக்கு அனுமதி வழங்கவில்லை என பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் கூற்றுக்கு மறுப்பு தெரிவித்த அமைச்சர் பிமல் ரட்நாயக்க அவரின் குற்றச்சாட்டையும் ஹன்சார்ட் அறிக்கையிலிருந்து நீக்குமாறு தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.02.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 16

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணிலிடமிருந்து இப்படியோர் அறிவுரை

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வெளிநாட்டுப் பயணங்களில் பரப்பரப்பாக இருக்கிறார். சர்வதேச மகாநாடுகளில் அவ்வப்போது கலந்து கொள்கிறார். இப்போதும், இந்திய பிரமதர் மோடியின் அழைப்பில் இந்தியா சென்றிருக்கிறார். “தெற்காசியாவின் வளர்ச்சியும் சவால்களும்“, பற்றி அங்கு உரையாற்றவுள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ரணில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியாக வரவேண்டும் என்னும் அவரின் வாழ்நாள் ஆசையை பூர்த்தி செய்ய முடியாதவராக வெளியேற நேர்ந்தது.


இவ்வாறு வெளியேறினாலும்கூட அரசியல் அரங்கில் தான் ஒரு தவிர்க்க முடியாத நபர் என்பதை அடையாளப்படுத்தும் நோக்கில் தொடர்ந்தும் பரபரப்பாகவே இருக்கிறார். அவருக்குள்ள சர்வதேச தொடர்புகளின் அடிப்படையில், அதிகாரத்தில் இல்லாதபோதும்கூட அவரால் தனக்கொரு முக்கியத்துவத்தை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது. ஒருவேளை அரசாங்கம் நெருக்கடியை எதிர்கொள்ளும்போது மீண்டும் தனது தேவை ஏற்படலாம் - அதன் காரணமாக பரபரப்பாக இருப்போம் என்றும் அவர் எண்ணுகிறாரோ?

சில தினங்களுக்கு முன்னர் இளைஞர்கள் மத்தியில் புவிசார் அரசியல் விடயங்கள் தொடர்பில் பேசியிருக்கிறார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த அவர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இரட்டை நிலைப்பாட்டை பேணுவதாகவும் இந்த விடயத்தில் அரசாங்கம் கவனமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறியிருக்கும் நிலையில் இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவிப்பது அவருக்கு இலகுவாகவும் இருக்கக்கூடும். ட்ரம்ப் நிர்வாகம் வெளியேறியிருப்பது குடியரசு கட்சியின் கொள்கை நிலைப்பாடாகும். அதாவது, குடியரசு கட்சியின் இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அதனை அவர்கள் நிராகரித்தே வந்திருக்கின்றனர். குடியரசுக் கட்சியும் மனித உரிமைகள் பேரவை பக்கச் சார்பானது. இஸ்ரேல் விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்னும் குற்றச்சாட்டுகளையே முன்வைக்கிறது. அந்தக் குற்றச்சாட்டையே ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கு ஏற்றவாறு மாற்றிக் கூறுகிறார்.

இங்கு விடயம், இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது தான் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி - அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வாக் குறுதியும் வழங்கப்பட்டது. இந்த அடிப்படையில் ரணில் - மைத்திரியின் அரசாங்கத்தை நல்லாட்சி அரச்ாங்கம் என்று கூறி சம்பந்தனின் கூட்டமைப்பும் ரணிலுடன் தேனிலவில் திளைத்த கதையை இப்போது மக்கள் மறந்து போயிருக்கலாம். ஆனால், இன்று அதே ரணில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை இரட்டை நிலைப்பாட்டைப் பேணி வருவதாகக் கூறுகிறார். பேரவையின்மீது இவ்வாறான குற்றச்சாட்டுகள் உண்டுதான். மனித உரிமைகள் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் பல நாடுகளின் அரசியல்வாதிகளும் அவ்வப்போது கூறுவதுதான். ஆனால், அதனை ரணில் கூறுவதுதான் ஆச்சரியமானது. அரசியலில் ஒருவர் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார் என்பதற்கான ஓர் உதாரணமாக இதனை எடுத்துக் கொள்ளலாம்.

ஜனாதிபதித் தேர்தலின்போது, தமிழ் அரசுக் கட்சி ஒருபுறமும் ஏனைய கட்சிகள் மறைமுகமாகவும் தங்களுக்கு விருப்பமானவர்களை ஆதரிப்பதற்காக முட்டி மோதிக் கொண்டன. அரசியலில் நபர்களை நம்பி - அவர்களுடன் தங்களுக்குள்ள நெருக்கத்தைப் பெருமையாக எண்ணிக் கொள்ளும் தமிழ் அரசியல்வாதிகள் இனியாவது சிந்தி யுங்கள்.



நல்லூர் சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூசை வழிபாடுகள் மிக~ும் சிறப்பாக நேற்று முன் தினம் நடைபெற்றது. (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## யாழ். போதனா மருத்துவமனை தாதியர்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தாதியர்களும் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை தாதியர் சங்கம் நேற்று நாடளாவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ். போதனா மருத்துவமனையில் நடந்த போராட்டத்தின் பின்னர் யாழ். போதனா மருத்துவமனையின் தாதியர் சங்கத் தலைவர் தர்மகுலசிங்கம் பானுமகேந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் எமது சங்கம் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நடைமுறையின் படி தாதியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு அளவு உட்பட சில கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன், பதவி உயர்வு காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இது சுகாதார ஊழியர்களை முழுமையாக பாதிக்கும் செயல்பாடாக உள்ளது. தாதியர்கள் மிகவும் வேலை பளுவுக்கு மத்தியில் இரவு - பகலாக வேலை செய்து வரும் நிலையில் இந்த நடவடிக்கையானது எங்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும் - என்றார். (ஐ-05)

## ஜனவரி மாதத்தில் 43 யானைகள் பலி!

கொழும்பு, பெப். 28

இந்த ஆண்டு ஜனவரி மாதம் மனித - யானை மோதலால் சுமார் 43 யானைகள் உயிரிழந்தன. இதே நேரம், மூவர் உயிரிழந்தனர் என்று சுற்றாடல் அமைச்சர் கலாநிதி தம்மிக பட்ட பெந்தி தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 3 ஆயிரத்து 527 யானைகளும் 1,195 பேர் உயிரிழந்தனர். ஒவ்வொரு யானை மற்றும் மனித உயிரிழப்புக்கும் வனஜீவ ராசிகள் திணைக்களத்துக்கு 10 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## சுகாதார அமைச்சின்மீது மக்களுக்கு நம்பிக்கை குறைவு

### சுகதார அமைச்சரே தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28

மருந்து விநியோகத்தில் ஏற்பட்ட பலவீனங்களால் சுகாதார அமைச்சின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை பெருமளவில் குறைந்துவிட்டது என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர், அந்தத் தவறு மீண்டும் நடக்காமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன - என்றும் கூறினார்.

நாட்டில் நிறுவப்பட்ட முதலாவதும் பழமையானதுமான அரச மருந்தகமான கொழும்பு - 07 அரச மருந்தகத்தின் 51ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், “உங்கள் நகரத்துக்கான மருந்தகம்” திட்டத்தின் கீழ், அரசு மருந்தகங்கள் இல்லாத நகரங்களில் அரசு மருந்தகங்களை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கைகள்”, எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஐ)

## விக்டர் ஐவன் அஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28

பிரபல ஊடகவியலாளர் விக்டர் ஐவனுக்கான அஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். ஊடக அமையத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். புது வேலை கிடைக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள்.

**இடபம்**
உங்களின் அணுகு முறையை மற்றவர்களின் ரசனைக் கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் இணைத்துப் பார்த்து கோபப்பட்டு கொண்டிருக்காதீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**சிம்மம்**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள்.

**துலாம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**தனுசு**
துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தோற்றப்பொலிவு கூடும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும்.

**மீனம்**
குடும்பத்தைப் பற்றியகவலைகள் வந்து நீங்கும். சகோதரர் வகையில் ஆரோக்யமான விவாதங்கள் வரக்கூடும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி பூஜைகள் அமைதியாக நடைபெற்றன



வவுனியா, பெப்.28
வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் சிவ ராத்திரி தின விசேட பூஜைகள் நேற்று முன்தினம் அமைதியாக நடைபெற்றன.

நேற்று முன்தினம் மதியம் மலை உச்சியில் அமைந்துள்ள ஆதி லிங்கேஸ்வரருக்கு விசேட அபிசேக பூஜைகள் நடைபெற்றன. ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் விசேட ஆராதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இம்முறை குறித்த ஆலயத்தில் மாலை 06. 00 மணிவரை மாத்திரமே பூஜைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் மாலை 06.00 மணிவரை ஆலயத்தில் விசேட வழிபாடுகளை மேற்கொண்ட பொதுமக்கள் அதன்பின்னர் தமது வீடுகளுக்குச் சென்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் காலை முதல் ஆலயப் பகுதியில் நெடுங்கேணி பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இருப்பினும், பொது மக்களின் வழிபாடுகளுக்கு எந்த வித தடைகளையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. (எ-10)

# வவுனியாவில் தாதியர்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா, பெப்.28
வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை தாதியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பளத் திருத்தத்தில் தாதியர் சேவைக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளமை மற்றும் மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் தாதியர்களால் மருத்துவமனைகளுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையில் நேற்றைய தினம் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாகவும் தாதியர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஒரு மணி நேர பணிப்பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டனர். (எ- 05)

# "கலை கலாசார பண்பாடுகள், வரலாறுகள் அடுத்த சந்ததிக்கும் கடத்தப்பட வேண்டும்"

யாழ்ப்பாணம், பெப்.28
கலை கலாசார பண்பாடுகளுடன், வரலாறுகள் மாறாதிருக்க அந்த வரலாறுகள் அடுத்த சந்ததிக்கு கடத்தப்பட வேண்டியது அவசியமாகும். அந்தச் செயல்பாட்டை வலுப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொரு கலாமன்றங்களுக்கும் உள்ளன என வேலணை பிரதேச செயலர் கே. சிவகரன் தெரிவித்தார்.

வேலணை துறையூர் ஐயனார் கலாமன்றத்தின் ஒருங்கிணைப்பில் ஐயனார் சனசமூக நிலைய கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிவ ராத்திரி தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"எமது அடையாளங்கள் பாதுகாக்கப்படுவது காலத்தின் அவசியமாகும்.

அதனடிப்படையில் தற்போதிருக்கும் எமது கலை கலாசார பண்பாடுகளை பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் கருவிகளாக இளம் சமூகத்தினர் ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும்.

அவ்வாறான ஒரு பொறிமுறையை வாழும் தலைமுறை உருவாக்குவதனூடாவே எமது இருப்பின் அடையாளங்களை அடுத்த சந்ததிக்கும் கொண்டு செல்லப்படுவதை உறுதி செய்ய முடியும்"- என்றார். (எ-05)

# பாராளுமன்ற அரசமைப்பு குழுவின் உறுப்பினராக சத்தியலிங்கம் எம். பி.

கொழும்பு, பெப்.28
பாராளுமன்றத்தின் அரசமைப்பு அலுவல்கள் குழுவின் உறுப்பினராக இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசமைப்பு அலுவல்கள் பற்றிய விடயங்களைக் கையாள்வதற்கான குழு சபாநாயகர் ஜெகத் விக்கிரமரத்தினவால் நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரை தவிசாளராக கொண்ட குறித்த குழுவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய பத்மநாதன் சத்தியலிங்கம், ஹர்ஷன நாணயக்கார, நிஹால் அபேசிங்க ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-10)

# சுற்றாடல் குழுவின் தீர்மானம் உதாசீனம்

யாழ்ப்பாணம், பெப்.28
சுற்றாடல் பாதுகாப்புக் குழுவின் தீர்மானத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் இளவாலை பொலிஸாரும் உதாசீனம் செய்வதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு குழுக் கூட்டம் இம்மாதம் 6 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது, யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள ஒலிபெருக்கி பாவனை தொடர்பில் பொதுமக்களால் தொடர்ச்சியாக மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக அதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனை மீறுவோர்மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழில் பல பிரதேச செயலகப் பிரிவுகளில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. சில பிரதேச செயலகப் பிரிவில் ஒலிபெருக்கிப் பாவனை - மோசமான செயல்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இது குறித்து பிரதேச செயலர்களுக்கு தெரியப்படுத்தினாலும் பொதுமக்களுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தும் துப்பாக்கிச் சூடுகள் மேல் மாகாண மக்கள் அச்சத்தில்!

கொழும்பு, பெப். 28

**பாதாள உலகக் குழுக்களின் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் கடந்த சில வாரங்களாக அதிகரித்துள்ளதால் மேல் மாகாணத்தில் வாழும் மக்கள் இரவு வேளைகளில் அச்சத்துடன், பயணங்களை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.**

கடந்த சில வாரங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இந்த நிலையில், கடந்த 19ஆம் திகதி புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் பாதாள உலகக் குழுவின் தலைவர்களின் ஒருவரான கணேமுல்ல சஞ்ஜீவ என்பவர் சுட்டுக்கொள்ளப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து பொது மக்களிடையே பெரும் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு தொடர்பில் அச்சுத்துடனேயே பொது மக்கள் தமது பயணங்களை மேற்கொள்கின்றனர். குறிப்பாக மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் இரவு வேளையில் தமது பயணங்களை பெரும் அச்சத்துடனேயே மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கணேமுல்ல சஞ்ஜீவவின் சுட்டுக்கொள்ளப்பட்டு சில தினங்களுக்குள் கொட்டாஞ்சேனை பகுதியில் அனைவரையும் உலுக்கும் வகையில் மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

தொடர்ச்சியாக இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இவை அனைத்தும் பாதாள உலகக் குழுக்களால் நிகழ்த்தப்படுவதாகக் கூறப்படுவதால் மக்கள் மத்தியில் பெரும் அச்சமான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவங்கள் குறித்து கருத்து வெளியிட்டிருந்த பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பாதாள உலகக் குழுக்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்த விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்பதால் பொது மக்கள் அச்சமின்றி தமது கடமைகளை செய்ய முடியும் என்றும் கூறியுள்ளார். (அ)

# துறைமுக முதலீடுகளுக்கு ஆதரவளிக்கும் நெதர்லாந்து!

கொழும்பு, பெப். 28

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோர்பஷ் ஆகியோருக்கு இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இலங்கையின் துறைமுகங்களை அண்மித்த முதலீடுகளுக்கு நெதர்லாந்து ஆதரவளிக்க தயாராக உள்ளதென இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோர்பஷ் தெரிவித்தார்.


இலங்கை மற்றும் நெதர்லாந்துக்கு இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் சுற்றுலா, துறைமுகம், முதலீட்டுத் துறைகளின் முன்னேற்றத்துக்கு நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுக்கக் கூடிய ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் கலாசார மற்றும் 'தொல்லியல் பெறுமதியான படைப்புக்களை பாதுகாத்தல் , கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆய்வுகள் மற்றும் இலங்கையின் கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒத்துழைப்பை வழங்கவும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

'கிளீன் சிறிலங்கா' வேலைத் திட்டத்தை புதிய நிலைக்குக் கொண்டு செல்ல நெதர்லாந்து அரசாங்கத்தினால் வழங்கக் கூடிய ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)

## ரி-56 துப்பாக்கி, தோட்டக்கள் மீட்பு!



கொழும்பு, பெப். 28

மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகள் கம்பஹா, யாகொடமுல்ல மஹாஹீன மயானத்தில் இருந்து ரி-56 துப்பாக்கி, ஒரு மகசீன் மற்றும் 22 தோட்டாக்கள் என்பவற்றை கைப்பற்றினர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் கீழ் நாடளாவிய ரீதியில் குற்றச் செயல்கள், போதைப்பொருளை தடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இவை மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸாரும், மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகளும் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மகளிர் விவகார அமைச்சர் வவுனியாவுக்கு திடீர் விஜயம்





வவுனியா, பெப். 28

மகளிர் விவகார அமைச்சர் சரோஜினி போல்ராஜ் நேற்று முன் தினம் வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டு தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பு வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது அமைச்சரிடம் வவுனியா மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக பெண்களினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், கோரிக்கைக் கடிதங்களும் கைகயளிக்கப்பட்டன.

இதேவேளை, பிரதேச பெண்கள் வலையமைப்பின் ஊடாக அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்ட அபிவி ருத்தி குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமர சிங்க, தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பொது அமைப் புக்களைச் சேர்ந்த பெண்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



வரலாற்றுப் புகழ் பெற்ற நாயன்மார்கள் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் நேர்த்திக் கடன்களை செலுத்தினர். (அ)

## மனித நுகர்வுக்கு ஒவ்வாத பால்மாவை விற்பனை செய்தவருக்கு 4 மாதச் சிறை!

கொழும்பு, பெப். 28

விலங்குகளுக்கு தீவனமாக விற்பனை செய்யப்பட்ட பால் மாவை பெற்று பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக பொதி செய்து வைத்திருந்த விநியோகத்தர் ஒருவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவருக்கு 4 மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்த குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றம் 10,000 ரூபாவை அபராதமாகவும் விதித்துள்ளது.

அத்துடன், குறித்த நபரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மனித நுகர்வுக்கு ஒவ்வாத 160 மெற்றிக் தொன் பால்மாவை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர், காலாவதி திகதியை மாற்றி குறித்த பால்மாவை புதிய பெட்டிகளில் பொதி செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், அவர் முன்னதாக 200 மெற்றிக் தொன் பால்மாவை விற்பனை செய்வதற்காக பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவற்றில், 40 மெற்றிக் தொன் பால்மா, ஐஸ்கிறீம், யோக்கட் மற்றும் பிஸ்கட் உற்பத்திக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், அவருக்கு எதிராக 2019ஆம் ஆண்டு குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

தொடர்ந்து 5 வருடங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த விநியோகத்தர் குற்றவாளி என நிரூபணமானது.

இந்தநிலையில் அவருக்கு 4 மாதக் கடூழிய சிறைத்தண்டனையும் 10,000 ரூபாய் அபராதமும் விதித்து குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# திஸ்ஸ விகாரைக் காணியை கொள்ளையிடுவதற்கு முயற்சி!

## விமல் வீரவன்ஸவின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, பெப். 28

"மன்னர் காலத்தில் திஸ்ஸ விகாரைக்கு வழங்கப்பட்ட காணியில் தற்போது ஒரு சதவீதமே எஞ்சியுள்ளது. அதையும் தனியார் காணியெனக்கூறி கொள்ளையடிக்க முற்படுகின்றனர்." என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-யாழ்ப்பாணத்திலுள்ள திஸ்ஸ விகாரை புராதன விகாரையாகும். அந்த விகாரைக்கு மன்னர்கள் வழங்கிய காணியில் நூற்றுக்கு ஒரு சதவீதம்கூட தற்போது இல்லை.

அந்த ஒரு சதவீத காணியையும் தனியார் காணியென்கூறி கொள்ளையடிக்க முற்படுகின்றனர். மூன்று நாட்களுக்கு போராட்டம் நடத்த முடியாது என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும் அதனை பொருட்படுத்தாது, பொலிஸார் முன்னிலையிலேயே போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல மண்வெட்டியையும் எடுத்துவருமாறு அழைக்கின்றனர். இதுவிடயத்தில் சட்டம் உரிய வகையில் செயல்படாதது ஏன்?-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு மறுசீரமைப்புக்கு முன்னர் தலைவர்கள் அணுகுமுறையில் மாற்றம்

## வலியுறுத்துகிறார் சந்திரிகா குமாரதுங்க

கொழும்பு, பெப். 28

**எந்தவொரு அரசியலமைப்பு மறுசீரமைப்பையும் மேற்கொள்வதற்கு முன்னதாக நாட்டின் அரசியல் சூழ்நிலையிலும் தலைவர்களின் அரசியல் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்படவேண்டுமெனவும், அன்றேல் அதனை பாராளு மன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாதெனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.**



புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் கொழும்பு ஜானகி ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசியல் கட்சிகள் பொறுப்பற்றவையாகவும், தேசிய நலன்கள் தொடர்பில் சிந்திக்காதவையாகவும்,அடுத்த தேர்தலில் என்ன செய்யலாம்? வெல்வோமா, தோற்போமா என சிந்திப்பவையாகவும் இருக்கும் தற்போதைய சூழ்நிலையில் நாம் இதனை எவ்வாறு செய்யப்போகிறோம்? முன்னைய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த செயற்திட்டமொன்று இடைநிறுத்தப்பட்டாலும் அவர்கள் வருந்தப்போவதில்லை.

இலங்கையை பொறுத்த மட்டில் முதலாவதாக அரசியல் நெறிமுறைகள் மாற்றமடைய வேண்டும்.அரகயல அதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அரகலயவின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட மிக வலுவான செய்தியை இன்னமும் பாரம்பரிய அரசியல் கட்சிகள் சரிவர புரிந்துணரவில்லை என்றே தெரிகிறது. அவர்களுக்கு அதனை செவிமெடுக்க வேண்டியதில்லை.அவர்களுக்கு அது புரியாது.

நாம் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முன்னெடுத்த முயற்சிகள் யாவும் பாராளுமன்றத்துக்குள்ளிருந்து தூக்கியெறியப்பட்டன.எனவே வேறெதனையும் செய்வதற்கு முன்பதாக, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பல அரசியலமைப்பு வரைபுகள் நிலுவையில் உள்ளன.அவற்றை ஒன்றிணைத்து, தற்கால சூழ்நிலைக்கு பொருத்தமானதொரு வரைபை தயாரிப்பது இலகுவானதாக இருக்கும். எந்தவொரு அரசியலமைப்பு மறுசீரமைப்பையும் மேற்கொள்வதற்கு முன்னதாக நாட்டின் அரசியல் சூழ்நிலையிலும் தலைவர்களின் அரசியல் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.அன்றேல் அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

நாம் பாராளுமன்றத்தின் தன்மையை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும். இப்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்போரில் பெரும்பான்மையானோர் அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளை நிராகரித்துள்ளனர்.இல்லாவிடின் அவர்களது கட்சி அதனை நிராகரித்துள்ளது.அவ்வாறிருக்கையில் தற்போது மாத்திரம் அவர்களால் இதனை எவ்வாறு செய்ய முடியும் என எனக்குத் தெரியவில்லை-என்றார். (அ)

# வட்டுக்கோட்டையில் வன்முறையில் ஈடுபட்ட மூவர் வாளுடன் கைது!

யாழ்ப்பாணம், பெப். 28

வட்டுக்கோட்டையில் வாள் ஒன்றுடன் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை தெற்கை சேர்ந்த இளைஞர்களே நேற்று முன்தினம் புதன்கிழமை இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அந்தப் பகுதியில் மரணச் சடங்கு ஒன்று நடைபெற்றது. இதன்போது, சில இளைஞர்களிடையே முரண்பாடு ஏற்பட்டது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து பொலிஸார் அங்கு வந்தபோது சில இளைஞர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்நிலையில், வாள் ஒன்றுடன் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

# ரணில் வகுத்த வழியில் அநுர அரசின் பயணம்!

## நவீன் திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, பெப். 28

ரணில் விக்கிரமசிங்க வகுத்த வழியிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயணிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்படுத்திவருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க அன்று இட்ட அடித்தளத்தில் அநுர பயணிக்கின்றார் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பாதீடு உறுதிப்படுத்துகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தால்தான் பாதீடு தயாரிக்கபட்டுள்ளதுபோலும்.

தேசிய மக்கள் சக்தி கனவுலகமொன்றை உருவாக்கியது. ஆனால் நடைமுறையில் வேறு விடயம் நடக்கின்றது. இது பற்றி கதைப்பதற்கு பலமான எதிர்க்கட்சி இல்லை. இருக்கின்ற எதிர்க்கட்சி தூங்குகின்றது-என்றார். (அ)

# யாழ்ப்பாணத்துச் சிறுவன் முல்லையில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவில் சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த சிறுவன் முல்லைத்தீவு - வற்றாப்பளையிலுள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அவர் காணாமல் போயிருந்தார்.

அவரை உறவினர்கள் தேடிய நிலையில் அங்குள்ள நீர்நிலை ஒன்றிலிருந்து சிறுவனின் சடலத்தைக் கண்டு பிடித்தனர்.

சிறுவனின் மரணம் தற்செயலாக நிகழ்ந்ததா அல்லது கொலையா என்ற கோணத்தில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நீதிபதிக்கு எதிரான முகநூல் பதிவுகள் குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 28

கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்கும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்னவுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட இரண்டு பதிவுகள் குறித்து கொழும்பு உயர் நீதிமன்ற பதிவாளர் நீதிமன்றத்துக்கு அறிக்கை அளித்துள்ளார்.

இந்தப் பதிவு கடந்த 21 ஆம் திகதி "போத்தல ஜயந்த" மற்றும் "சனத் பாலசூரிய" என்ற பெயர்களில் உள்ள முகநூல் பக்கங்களில் பதிவிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஊடாக நீதிமன்றம் அவமதிக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்ற பதிவாளரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றப் பதிவாளர், நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, குறித்த பேஸ்புக் பதிவுகளுடன் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிடையில், கிரிஷ் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை அண்மையில் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# துண்டு விழும் தொகையை அரசு எப்படி நிவர்த்தி செய்யும்?

கொழும்பு, பெப். 28

வரவு - செலவு திட்டத்தில் 2 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் துண்டு விழும் தொகையை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என எந்த விடயமும் தெரிவிக்கப்படாமல் இருப்பதுடன், அரசாங்கத்தின் இலக்கை அடைந்துகொள்ள எடுக்கும் நடவடிக்கைகள் என்ன என்பதையும் அரசாங்கம் தெளிவாகக் குறிப்பிடவில்லை. ரணில் விக்கிரமசிங்க சட்டதுக்கு உட்பட்டு தயாரித்துள்ள சட்ட ரீதியான வழியில் அரசாங்கம் செல்லாவிட்டால் பேரழிவுக்கு முகம்கொடுக்க நேரிடும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களை சந்தித்தபோது அவர் தெரிவித்தவை வருமாறு,

2015இல் நாங்கள் ஆட்சியை பெற்றுக்கொள்ளும்போது அலுவலக பணி உதவியாளர்களின் அடிப்படைச்சம்பளம் 11,726 ரூபாயாகும். மீண்டும் 2024இல் நாட்டை பொறுப்பளிக்கும்போது அவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்துடன் 24,250 ரூபா கிடைக்கப்பெற்றது. அதேபோன்று கேஸ், பெட்ரோல் விலை அதிகரித்துள்ள நேரத்தில், 2015 ஜனவரி 8ஆம் திகதி நாட்டை பொறுப்பெற்று 100 நாட்களில் அவர்களுக்கு நிவாரணம் வழங்கி, வழங்கப்படும் நிவாரணங்களை வரவு செலவு திட்டத்தில் உள்வாங்கி, கடனை எப்படி அடைப்பது, கடனை எப்படி பெறுவது என்ற இரண்டு விடயங்களையும் ஒப்பிட்டு பார்த்துத்தான் பொது மக்களுக்கும் ஒட்டுமொத்த அரச துறைக்கும் நிவாரணம் வழங்கினோம்.

2015இல் பட்டதாரி தாதியர்கள் மற்றும் ஆசிரியர்களின் அடிப்படைச்சம்பளம் 15,620 ரூபாயாகவே இருந்தது. 2020 ஆகும்போது அவர்களின் அடிப்படைச்சம்பளம் 32,525 ரூபாய் வரை எடுத்துச்சென்றோம். அரச துறையில் சம்பளம் அதிகரிக்கும்போது முரண்பாடுகள் ஏற்படாதவகையில் அதிகரிக்கப்பட வேண்டும். கடந்தகால சம்பள ஆணைக்குழுவின் பழைய அறிக்கை மற்றும் தற்போது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கும் வரவு - செலவு அறிக்கையை பார்த்தால் பெரும் பிரச்னை ஒன்று ஏற்படும் நிலையே காட்டுகிறது.

அரசாங்கத்தின் இந்த சம்பள அதிகரிப்பால் ஒட்டுமொத்த அரச துறையும் பேரழிவுக்கு முகம்கொடுத்து இருக்கிறது. அதனால் குறிப்பிட்டதொரு தொகை சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளும்போது, படிப்படியாக அனைத்து துறைகளையும் உள்வாங்கும் வகையில் அது இடம்பெறாவிட்டால் அது பெரும் பிரச்னையாக மாறும்.என்றாலும் அவ்வாறு எந்த பிரச்னையும் ஏற்படாது என அரசாங்கம் தெரிவிக்கிறது. - என்றார். (ஐ)

# 1.2 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் கைது!

கொழும்பு, பெப். 28

குஷ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

38 வயதான குறித்த பெண் தாய்லாந்திலிருந்து ஹொங்கொங் ஊடாக நேற்று நாட்டை வந்தடைந்துள்ளார்.அவர் தமது பயணப் பைக்குள் ஒரு கிலோ 200 கிராம் போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து கொண்டுவந்துள்ளதாக சுங்கம் தெரிவித்தது.

கைப்பற்றப்பட்ட குஷ் போதைப்பொருளின் பெறுமதி 1.2 கோடி ரூபாயாகும்.

சந்தேகநபரான பெண் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீண்டும் ரணிலிடம் ஒப்படைத்துச் செல்லுங்கள்!

## பிரேம்நாத் தொலவத்த சொல்கிறார்

கொழும்பு, பெப். 28

**தேசிய மக்கள் சக்தியினருக்கு அனுபவம் இல்லை என்று நாம் தேர்தலுக்கு முன்னரே கூறினோம். தற்போது மக்கள் அதனை நடைமுறையில் காண்கின்றனர். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி முறையாக ஆட்சி செய்ய முடியாது விட்டால் மீண்டும் நாட்டை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்துச் செல்லுங்கள் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷ மாத்திரமின்றி சகல எதிர்க்கட்சி எம். பிக்களுக்கும் அச்சுறுத்தல் காணப்படுகிறது. அவர்களுக்கு தமது நிலைப்பாட்டுக்கமைய சுதந்திரமாக செயல்படுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது. ஆளும்தரப்பு எவ்வாறான சதி செயல்களில் ஈடுபட்டாலும் நீதித்துறையின் மீது எமக்கு நம்பிக்கை இருக்கிறது.

எதிர்க்கட்சிகளை முற்றாக இல்லாதொழித்து கம்யூனிஷ்ட் ஆட்சியை தோற்றுவிப்பதே இவர்களின் நோக்கமாகும். கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழக்கின்றனர்.

இவை தொடர்பில் மக்கள் தெளிவு பெற வேண்டும். இவ்வாறு சந்தேகநபர்கள் உயிரிழப்பது சிறந்தது என சிலர் எண்ணுகின்றனர். ஆனால் அது தவறாகும்.

தேசிய பாதுகாப்பு குறித்து எமக்கு கற்றுக் கொடுப்பதாகக் கூறியவர்களுக்கே தேசிய பாதுகாப்பு என்ன என்ற புரிதல் இல்லை.

அதனால் தான் பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகள் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பில்லை என்று கூறுகின்றனர். இந்த அழுத்தத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அவரது சாரதியை கழுதை என திட்டினார்.

இவர்களுக்கு அனுபவம் இல்லை என்பதை நாம் தேர்தலுக்கு முன்னரே குறிப்பிட்டிருந்தோம். அதனை தற்போது மக்கள் நடைமுறையில் காண்கின்றனர். நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால் மீண்டும் ரணிலிடம் ஒப்படைத்து விட்டுச் செல்லுங்கள் - என்றார். (ஐ)

# மாடியிலிருந்து தவறிவிழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 28

மேல் மாடியில் வயறிங் வேலையில் ஈடுபட்டிருந்தவர் தவறி விழுந்து உயிரிழந்தார்.

கொக்குவில் - பூநாறிமடம் பகுதியில் கடை ஒன்றில் ஈடுபட்டிருந்தவேளையே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் வண்ணார்பண்ணையை சேர்ந்த தனபாலசிங்கம் நிருஜன் (வயது 42) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

மாடியிலிருந்து தவறி விழுந்தவரை உடன் வேலை செய்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் அவர் உயிரிழந்தார்.

அவரின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரி சோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது. (ஐ-05)

# இரு குழுக்களிடையே மோதல் ஒருவர் பலி; இருவர் படுகாயம்

கொழும்பு, பெப். 28

இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். அத்துடன், மேலும் இருவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

கொழும்பு - கிராண்ட்பாஸ் - கம்பிகொட்டுவ பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் கூர்மையான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்கள் அவசியம்!

## தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, பெப். 28

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் செயல்பாடுகள் என்னவென்பது தொடர்பில் தெளிவற்ற தன்மை காணப்படுகிறது. நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தேர்தல்கள் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசமைப்பின் பிரகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். தேர்தலை நடத்தும் திகதி அனைவருக்கும் சாதகமான வகையில் அமையும்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகள் என்ன, தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் வகிபாகம் என்பது தற்போது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடயம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களை பொறுத்தவரையில் அதிகார ரீதியிலான சிக்கல்நிலை காணப்படுகிறது.

ஆகவே, எதிர் வரும் காலப் பகுதிகளில் நடை முறைக்கு சாத்தியமான வகை யில் தேர்தல்கள் சட்டம் திருத் தம் செய்யப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# சாதாரண மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ததால் பாதீட்டை ஆதரித்தேன்!

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

கொழும்பு, பெப். 28

ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வரவு - செலவுத் திட்டம் சதாரண மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் முன்மொழிவுகளை கொண்டிருந்தமையால் அதனை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்ததாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விளக்கம் அளித்துள்ளார்.

வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்புக்கு ஆதரவாக செல்வம் அடைக்கலநாதன் எம். பி. வாக்களித்தார்.

இது தொடர்பில், அவர் விளக்கம ளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற கோஷத்துடன் மக்களின் ஆணையை கோரிய ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கு அதற்கான ஆணை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வழங்கப்பட்டுள்ளது.

அவ்விதமான நிலையில் அவர்களின் ஆட்சியின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக பார்க்கையில் அவர்கள் வடக்கு மாகாணத்துக்கு அதிகமான ஒதுக்கீடுகளைச் செய்துள்ளார்.

அத னைவிடவும், சதாரண மக்க ளின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் அமைந்திருக்கின்றன என்பதை கட்சி அரசியலுக்கு அப்பால் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில், அவர்களின் முன்மொழிவுகள் உரிய வகையில் செயல்படுத்தப்பட்டு நடைமுறைச்சாத்தியமாக வேண்டும் என்பது எனது வலியுறுத்தலாக இருக்கின்றது.

என்னைப் பொறுத்தவரையில், மாற்றத்தை நோக்கி அரசாங்கம் செல்வதற்கு ஆதரவை வழங்குவதற்கு தயாராகவே உள்ளேன்.

ஆனால், அரசாங்கம் இனப் பிரச்னைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங் களையும் தாமதமன்றி முன்னெ டுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# கடற்படை அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு!



கொழும்பு, பெப். 28

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் கடற்படை உயராதிகாரிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை தொடர்பாகவே குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த கடல் பரப்பில் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள், கடல் மார்க்கமாக நடைபெறும் ஆயுத விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனை சுற்றிவளைப்பு உள்ளிட்ட ஆழ்கடலில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு முன்னெடுப்புக்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கஞ்சன பானகொட உள்ளிட்டவர்களும் கடற்படையின் உயர் அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர். (அ)

கணேமுல்லை சஞ்சீவ கொலை

# அதிகாரிகள் உட்பட 15 பேரிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, பெப். 28

கணேமுல்லை சஞ்சீவவின் கொலை தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் ஒரு பகுதியாக அதிகாரிகள் உட்பட 15 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் மற்றும் பொலிஸ் சிறப்புப் படை அதிகாரிகள், கணேமுல்லை சஞ்சீவவை நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றதற்குப் பொறுப்பான அதிகாரி ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டதாக சிறைச் சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 15 பேரிடம் விசாரணை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசாரணைகள் உதவி சிறைச்சாலை கண்காணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்படுகின்றன.

இதனிடையே, கணேமுல்லை சஞ்சீவ நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுவதற்கு முன்பு அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறையில் ஒரு கைபேசியும் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளங்களை புனரமைப்பதன் மூலம் 5000 மெற்றிக்தொன் நெல் உற்பத்தி

## குகதாசன் எம். பி. தெரிவிப்பு

திருகோணமலை, பெப்.28

**அரிசி உற்பத்தியில் தன்னிறைவு காணும் பொருட்டாக திருகோணமலை மாவட்டத்தில் கைவிடப்பட்ட குளங்களை இந்த ஆண்டில் மறுசீரமைத்து அபிவிருத்தி செய்தால் 5000 மெற்றிக் தொன் நெல்லை பெறலாம் என இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.**

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்றது. இதன்போது, உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "1985ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த மாவட்டத்தில் கைவிடப்பட்டுள்ள 205 சிறு குளங்களில் ஐம்பதையும் கைவிடப்பட்டுள்ள அணைக்கட்டு 25இல் ஐந்தையும் இந்த ஆண்டில் அபிவிருத்தியடைய செய்தால் நன்மைகளை பெறலாம். இது போன்று யான் ஓயா அணைக்கட்டில் இருந்து நீலபணிக்கன் குளத்துக்கு நீர் வழங்குவதன் ஊடாக ஒரு முறை நெற் செய்கை மேற்கொள்ளப்படும் 3000 ஏக்கர் நிலத்தை இரு போகமும் செய்கை பண்ண முடியும். இதன் மூலமாக 7000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை பெறலாம்.

பாலம் போட்டாறு பகுதியில் உள்ள பத்தினிபுர அணைக்கட்டின் சில கதவுகள் உடைக்கப்பட்டுள்ளதால் நீர் வீண் விரயமாக்கப்படுகிறது. இதனைச் சீர் செய்ய வேண்டும். மேலும், மூதூர் பிரதேச செயலக பகுதியில் உள்ள கட்டைபறிச்சான் இறால் பாலம் உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளது. இதனைப் புனரமைக்க வேண்டும். குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் பதவி சிறிபுர வரையான எல்லை தெளிவின்மை காணப்படுகிறது .

கோணேசர் கோவில் வளாகத்தில் எவரது ஒப்புதலும் இன்றி வீதியின் இரு மருங்கிலும் கட்டப்பட்டுள்ள கடைகள் தொடர்பாக 2019. 06. 10 ஆம் திகதி எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானத்தை தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும். மேலும், யானை பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். குச்சவெளியில் சுற்றுலாத் துறை அபிவிருத்தி என்ற போர்வையில் கையகப்படுத்தப்பட்டுள்ள 883 ஏக்கர் நிலங்களை விவசாய செய்கைக்காக விடுவிக்கவும். இதே போன்று திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பகுதியில் துறைமுக அதிகார சபையால் 5572 ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு வழங்க கையகப்படுத்தி காணிகளை கபளீகரம் செய்வது சட்டத்துக்கு முரணானது. இதனை விடுவிக்க ஆராயவும்" என்றார். (எ)

# முஸ்லிம் வித்தியாலயத்தில் முப்பெரும் விழா நிகழ்வுகள்



மாளிகைக்காடு, பெப்.28

அம்பாறை மாவட்டம், கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் முப்பெரும் விழா நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எம். ஐ. அஸ்மி தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹிதுல் நஜீம் கலந்து சிறப்பித்தார்.

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான கற்றல் வள நிலையம் (நூலகம்) மற்றும் 2024ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, அண்மையில் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிய எஸ். எம். ஸஹாபி மற்றும் திருமதி சபீனா ஆகியோரின் சேவை நலன் பாராட்டு விழா என்பன இதன்போது நடைபெற்றன. (எ- 06)

# கடலில் மிதந்து வந்த பாரிய நீர்த் தாங்கி!



கல்முனை, பெப்.28

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை பகுதியில் பாரிய நீர்த் தாங்கி ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

கடலில் நிலவும் கடும் காற்றால் குறித்த நீர்த் தாங்கி கரையொதுங் கியிருக்கலாம் என்று மீனவர்கள் தெரிவித்தனர். இதேவேளை, இது தொடர்பில் அதிகாரிகளுக்கு தெரியப்படுத் தப்பட்டுள்ளது.

குறித்த தண்ணீர்த் தாங்கி இரும்பு உலோகத் தில் செய்யப்பட்டு அதன்மேல் பைரினால் வார்க்கப்பட்டு இளம் பச்சை வர்ண கூம்பக வடிவில் அடைக்கப்பட்டதாக காணப்படுகின்றது.

இதன் மேற்பகுதியில் ரயர்கள் காணப்படுகின்றன. இது பெரிய கப்பல்களின் ஒரு பாகமாக இருக்கலாம் என்றும் சில மீனவர்கள் தெரிவித்தனர். இவ்வாறு மர்மப் பொருள் கரையொதுங்கியுள்ளமை தொடர்பில் கடற்படைக்கு தாம் அறிவித்துள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் கூறினர்.

இதேவேளை, கடந்த சில வாரங்களாக கிழக்கு மாகாண கடற்கரை பகுதிகளில் மர்மப் பொருட்கள் மற்றும் ஆளில்லா படகுகள், டொல்பின்கள் போன்றவை கரையொதுங்கி வருகின்றன. இதேவேளை, நேற்று முன்தினம் கரையொதுங்கிய நீர்த் தாங்கியை இராணுவத்தி னர், கடற்படையினர், பொது மக்கள் எனப் பலர் பார்வை யிட்டு வருகின்றனர். (எ-01)

# மாணவர்கள் கௌரவிப்பு



நிந்தவூர், பெப்.28

நிந்தவூர் அல் அதான் வித்தியாலயத்தில் தரம் -05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலையில் நடைபெற்றது.

அதிபர் எம். ஹபீப்புல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எச். எம். ஜாபீர் பிரதம விருந்தினராகவும், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

### மீன் வியாபாரிகளுக்கு தராசு வழங்கும் நிகழ்வு




கிண்ணியா, பெப்.28

திருகோணமலை, கிண்ணியா மீன் வியாபாரிகளுக்கு தராசுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் கிழக்கு மாகாண சபை தவிசாளர் எம். எச். எம். பாயிஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், கிண்ணியா நகர சபை செயலாளர் எம். கே. எம். அனீஸ், மீன் வியாபாரிகள் சங்க செயலாளர் எம். ஜப்பார், மீன் வியாபாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, சுமார் 250இற்கும் மேற்பட்ட மீன் வியாபாரிகளுக்கு தராசுகள் வழங்கப்பட்டன. (எ)




சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையின் 2025 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் அதிபர் யூ. எல். நஸார் தலைமையில் கடந்த 25 ஆம் திகதி சாய்ந்தமருது பொலிவேரியன் மைதானத்தில் நடைபெற்றன.



அம்பாறை மாவட்டம் காரைதீவு அருள்மிகு சிறீ ஆதிசிவன் ஆலய வருடாந்த மகா சிவராத்திரி பெருவிழாவையொட்டி சிவலிங்க நீராபிஷேகத்துக்காக நேற்று முன்தினம் கடல்நீர் கொணர் பவனி சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்:- வி. ரி. சகாதேவராஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான விபத்தில் சிக்கி சூடானில் 46 பேர் பலி!

கார்ட்டூம், பெப்.28

**சூடானில் இராணுவ விமானம் ஒன்று நேற்று முன்தினம் மாலை திடீரென விபத்தில் சிக்கியதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்தது.**

தலைநகர் கார்ட்டூம் அருகில் உள்ள நகரமான ஓம்டுர்மனுக்கு வடக்கே வாடி சயீத்னா விமானத் தளத்திலிருந்து புறப்பட்டபோது அன்டோனோவ் விமானம் விபத்துக்குள்ளானது என்று இராணுவம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் ஆயுதப்படையினரும், பொதுமக்களும் கொல்லப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது. விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

இந்த நிலையில், இராணுவ விமான சிக்கி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓம்டுர்மனில் உள்ள ஒரு வீட்டின் மீது விமானம் மோதியதாக அந்த நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. பொது மக்கள் அதிகம் வசிக்கும் பகுதி யில் இந்தக் கொடூர விபத்து நிகழ்ந்ததால், மக்கள் பலர் இறந்திருக்கலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# அமெரிக்கா வசம் காஸா ஏ. ஐ. வீடியோ வெளியீடு

வாஷிங்டன், பெப்.28

அமெரிக்காவின் வசம் காஸா வந்த பின்னர் எப்படி இருக்கும்? என்று ஏ. ஐ. வீடியோ ஒன்றை அந்த நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

காஸாவுக்கு எதிராக இஸ்ரேல் நடத்தி வந்த போர் ஓய்ந்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் பரஸ்பரம் கைதிகளின் விடுவிப்பு நடந்து வருகிறது. இந்தச் சூழலில், ட்ரம்ப், சில வாரங்களுக்கு முன் காஸாவை எடுத்துக் கொள்ள விரும்புகிறேன் என அறிவித்து, உலக நாடுகளைத் திகைக்க வைத்து விட்டார்.

பலஸ்தீன நாட்டுக்கான ஆதரவு என்ற அமெரிக்க கொள்கைக்கான நீண்டகால நிலைப்பாட்டில் இருந்து விலகும் முடிவாக இது பார்க்கப்பட்டது. ஆனால், அதனை அடைவது எந்த அளவுக்கு சாத்தியம் என்பதில் சந்தேகங்களும் எழுந்தன. இதன் ஒரு பகுதியாக, காஸா மக்களை பிற நாடுகளில் குடியமர்த்தும் திட்டமும் உள்ளது.

ஆனால், அது தற்காலிகத் திட்டம் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ரூபியோ குறிப்பிட்டார். இதற்கு நட்பு நாடுகள் வரவேற்பு தெரிவித்தன. ஆனால், ஹமாஸ் மற்றும் அரபு நாடுகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த நிலையில், காஸாவை அமெரிக்கா தன்வசப்படுத்தி, எடுத்துக் கொண்டால் அதன் பின்னர் எப்படி இருக்கும் என்பது பற்றிய செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) வீடியோ ஒன்றை ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

போரால் சீரழிந்த காஸா தற்போது எப்படி உள்ளதோ, அதுபோன்ற காட்சிகளுடன் வீடியோ தொடங்குகிறது. ஆனால், கடற்கரையருகே நிறுத்தி வைக்கப்பட்ட படகுகள், வீதிகளில் சொகுசு கார்கள், பெரும் கட்டடம் போன்ற தனித்துவம் வாய்ந்த உருவம் கொண்ட உயர்ந்த கட்டடம் என நகரம் உருமாற்றம் பெற்று காண்பிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப்பின் பெரிய உருவ சிலை ஒன்றும் காணப்படுகிறது. அதன் பின்னணியில் சூரியன் மறையும் காட்சிகளும் உள்ளன.

புதிய காஸாவில் ட்ரம்ப்பின் நெருங்கிய நண்பரான எலான் மஸ்க், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். கடற்கரையில், புன்னகைத்தபடி மஸ்க் தன்னுடைய உணவை எடுத்துக் கொள்கிறார்.

கடற்கரையில் இருந்து சற்று தொலைவில், குழந்தை ஒன்று சந்தை பகுதியில், ட்ரம்ப் பலூன் ஒன்றை பிடித்தபடி காணப்படுகிறது.

நகரின் நடுவே, யார் தலைவன் என காட்டும் வகையில், ட்ரம்ப் காஸா என்ற பெயருடன் உயர்ந்து நிற்கும் கட்டடம் ஒன்றும் உள்ளது.

இறுதியாக, ட்ரம்ப் மற்றும் நெதன்யாகு இருவரும் நீர்நிலை ஒன்றின் அருகே கோடை வெயிலை தணிக்கும் வகையில் இளைப் பாறுவது போன்று காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. (எ)

## மாநிலங்களவை தேர்தலில் கெஜ்ரிவால் போட்டி?

புதுடில்லி, பெப்.28

மாநிலங்களவை எம். பி. தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், டில்லி முன்னாள் முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் டில்லியில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி தோல்வியடைந்தது. 48 இடங்களில் வெற்றி பெற்ற பா.ஜ.க. ஆட்சியை பிடித்தது. இந்தத் தேர்தலில் முன்னாள் முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால், முன்னாள் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா ஆகியோர் தோல்வியடைந்தனர். (எ)

## இந்துக்களுக்கு துப்பாக்கி உரிமம் வேண்டும்

புதுடில்லி, பெப்.28

இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் இந்துக்களின் பாதுகாப்புக்கு துப்பாக்கி உரிமம் தரும் விதிமுறைகளை தளர்த்த முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு துறவியான யத்தி நரசிங்கானந்த் கடிதம் எழுதியுள்ளார்.

உ.பி.யின் காஜியாபாத்தில் உள்ள தாஸ்னா தேவி கோவில் மடத்தின் தலைவரான யத்தி நரசிங்கானந்த், நேற்று முன்தினம் அவசர கூட்டம் நடத்தி "இந்துக்கள் அனைவரும் பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கிகள் வைத்திருக்க வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றினார். இதனடிப்படையில் துப்பாக்கி உரிமம் கோரி முதல்வருக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

# நீடிக்கும் மோதல்களால் பங்களாதேஷுக்கு ஆபத்து

## இராணுவ தளபதி எச்சரிக்கை

டாக்கா, பெப்.28

பங்களாதேஷில் நீடிக்கும் மோதல்களால் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அந்த நாட்டு இராணுவத் தளபதி வாகர் உஜ் ஜமான் எச்சரித்துள்ளார்.

பங்களாதேஷில் கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது. இதையடுத்து பிரதமர் பதவியை இராஜி னாமா செய்த ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு வெளியேறினார்.

தற்போது அங்கு முகமது யூனுஸ் தலைமையி லான இடைக்கால அரசு பதவி யில் உள்ளது. பங்களாதேஷில் தொடர்ச்சியாக போராட்டங்களும் மோதல்களும் இடம் பெற்று வரும் நிலையில், இராணுவத் தளபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது, "அதிகாரிகள் வழக்குகளில் சிக்கியிருப்பதால், இளைய அதிகாரிகள் முதல் மூத்த அதிகாரிகள் வரை அச்சத்தில் உள்ளனர். சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதால், ஆயுதப்படைகளுக்கு கடமை அதிகரித்துள்ளது. உடனடியாக மக்கள் ஒற்றுமையுடனும், நிறுவனங்கள் கட்டுப்பாட்டுடனும் பணியாற்ற வேண்டும்.

மக்கள் இடையே தொடர்ச்சியாக அதிகரித்து வரும் மோதல்கள் காரணமாக நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.

தொடர்ச்சியாக உங்களுக்கு உள்ளே சண்டையிட்டு கொண்டிருந்தால், நாட்டின் சுதந்திரத்துக்கும், ஒற்றுமைக்கும் ஆபத்து ஏற்படும் என எச்சரிக்கிறேன்"- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கல்விச் சுற்றுலா சென்ற பஸ் விபத்து; 18 பேர் பலி

பாங்கொக், பெப்.28

தாய்லாந்தில் கல்விச் சுற்றுலா சென்ற இடத்தில் பேருந்து ஒன்று விபத்தில் சிக்கியதில் 18 பேர் பலியாகினர்.

தலைநகர் பாங்கொக் நகரிலிருந்து கிழக்கே பிரச்சின்பரி மாகாணத்தில் நேற்று அதிகாலை இரட்டை மாடி கொண்ட பஸ் ஒன்று வீதியில் பயணித்துக் கொண்டிருந்தது. அந்த பஸ்சில் 49 பேர் கல்விச் சுற்றுலாவுக்காக சென்றிருந்தனர்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை 3 மணியளவில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த பஸ் கவிழ்ந்தது. மலையிலிருந்து உருண்டது. இந்த விபத்தில், 18 பேர் பலியாகினர். 31 பேர் காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

# அமெரிக்காவுடன் கனிமவள ஒப்பந்தம்

## உக்ரைன் ஒப்புதல்

வாஷிங்டன், பெப்.28

உக்ரைன் - ரஷ்யா இடையே 3 ஆண்டுகளுக்கு மேல் போர் நீடித்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிரம் காட்டி வருகிறார்.

இந்த நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, இன்று ட்ரம்பை சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ரஷ்யாவுடனான போரின்போது உக்ரைனுக்கு அளித்த உதவிகளுக்குப் பதிலாக அந்த நாட்டின் அரியவகை கனிமங்களை வெட்டி எடுக்கும் உரிமத்தை தங்களுக்கு கால வரையறையில்லாமல் வழங்க வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பேச்சுக்கள் நடத்துவதற்காக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அமெரிக்கா செல்கிறார். அப்போது, இருநாட்டுத் தலைவர்களும், ரஷ்யாவுடனான போர் குறித்து பேச்சுக்கள் நடத்துவர்.

மேலும், அமெரிக்காவுடன் பொருளாதார கூட்டாண்மையை இறுதி செய்வதற்காக கனிமவள ஒப்பந்தத்தில் ட்ரம்பும் ஜெலன்ஸ்கியும் கையெழுத்திடுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஒப்பந்த விதிமுறைகளை உக்ரைன் அரசு ஏற் றுக்கொண்டதாகவும், உக்ரைன் தனது கனிம வளங்களை கூட்டாக மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யாவுடனான போரில் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவை பெறுவதற்கும், ட்ரம்ப் நிர்வாகத்துடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கும், நீண்ட கால அமெரிக்க பாதுகாப்பு உறுதிப்பாட்டுக்கு வழிவகுக்கும் வகையிலும் இந்த ஒப்பந்தம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தை உக்ரைன் - ரஷ்யா போர் நிறுத்தத்துக்கு முதல் படியாக அமெரிக்கா கருதுகிறது.

உக்ரைனில் லித்தியம், கிராபைட், கோபால்ட், ரைற்றானியம் போன்ற தாதுக்கள் நிலத்தடியில் ஏராளமாக உள்ளன. ஸ்கேண்டியம் போன்ற அரிய வகை தாதுக்களும் உள்ளன. அவை இராணுவத் தளவாடங்கள் முதல் மின்சார வாகனங்கள் வரை பல தொழில்களுக்குப் பயன்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கும்பமேளாவில் நேற்றுவரை 65 கோடி பேர் புனித நீராடினர்

## சிவராத்திரி விழாவுடன் நிறைவடைந்தது

பிரயாக்ராஜ், பெப்.28

இந்தியாவில் நடைபெற்ற மகா கும்பமேளாவில் 65 கோடி பேர் புனித நீராடினர் என்று உத்தர பிரதேச மாநில் அரசு அறிவித்துள்ளது.

பிரயாக்ராஜ் நகரில் கடந்த 45 நாட்களாக நடைபெற்ற மகா கும்பமேளா, சிவராத்திரி புனித நீராடலுடன் நிறைவடைந்தது. இதையடுத்து பிரயாக்ராஜ் நகரம் நேற்று முதல் இயல்புநிலைக்கு திரும்பி வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் 13ஆம் திகதி மகா கும்பமேளா தொடங்கியது. இவ்விழாவை முன்னிட்டு, தினமும் நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்.

உலகின் மிகப்பெரிய ஆன்மீக திருவிழாவாக இது அமைந்தது. இதனால், பிரயாக்ராஜ் நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது.

மகா கும்பமேளாவில் பங்கேற்றவர்கள் வாரணாசி காசி விஸ்வநாதர் கோவில், அயோத்தி இராமர் கோவில் உட்பட அம்மாநிலத்தின் முக்கிய கோவில்களுக்கும் சென்று தரிசனம் செய்தனர். இதுவரை 65 கோடிக்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்க மத்தில் புனித நீராடியதாக மாநில் அரசு தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் அணி வெற்றி இங்கிலாந்து போராடி தோல்வி!



லாகூர், பெப்.28

இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சி கொடுத்த ஆப்கானிஸ்தான் அணி, 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

8 அணிகள் இடையிலான சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழந்து 325 ஓட்டங்கள் குவித்தது. ஆப்கானிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக இப்ராஹிம் சட்ரான் 177 ஓட்டங்கள் எடுத்தார்.

இங்கி லாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்கள் வீழ்த் தினார். இதையடுத்து 326 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து விளையாடியது.

தொடக்கத்தில் பில் சால்ட் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஜேமி ஸ்மித் 9 ஓட்டங்களில் வெளியேறினார். மறுபுறம் சிறப்பாக விளையாடிய பென் டக்கெட் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஜோ ரூட் பொறுப்புடன் விளையாடி ஓட்டங்கள் குவித்தார். சிறப்பாக விளையாடிய அவர் சதமடித்தார். ஜோ ரூட் 120 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் .

இறுதியில் 49. 5 ஓவர்களில் இங்கிலாந்து அணி 317 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதனால், 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றி பெற்றது. ஆப்கானிஸ்தான் சார்பில் அஸ்மத்துல்லா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)

## இந்தத் தருணத்தில் நாங்கள் எந்த முடிவும் எடுக்கக்கூடாது

### ஜோஸ் பட்லர் தெரிவிப்பு



லாகூர், பெப்.28

இந்தத் தருணத்தில் நாங்கள்எந்தவொரு முடிவையும் எடுக்கக் கூடாது என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்தார்.

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இங்கிலாந்து இழந்துள்ளது.

லாகூர் கடாபி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து- ஆப்கானிஸ்தான் இடையேயான போட்டியில் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்றது.

இந்தத் தோல்வி குறித்து இங்கிலாந்து அணியின் தலைவர் பட்லர் கூறுகையில்,“சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் முதல் சுற்றிலிருந்து வெளியேறியிருப்பது மிகவும் ஏமாற்றமாக உள்ளது. இந்த ஆட்டத்தில் கூட நாங்கள் பல வெற்றி வாய்ப்புக்களைப் பெற்றிருந்தோம். ஆனால், எங்களுக்கான வாய்ப்பை நாங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஜோ ரூட் அபாரமான ஓர் இன்னிங்ஸ் விளையாடினார். ஆனால், அவருக்கு எங்கள் அணியின் ஏனைய 6 வீரர்களில் ஒருவர் கூட துணை நிற்கவில்லை.

நாங்கள் பந்து வீசும் போது கடைசி 10 ஓவர்களில் அதிக ஓட்டங்கள் விட்டுக் கொடுத்தோம். அதுதான் தோல்விக்கு காரணமாக அமைந்தது. ஆப்கானிஸ்தான் வீரர் இப்ராஹிமுக்கு என்னுடைய பாராட்டுகள்.

இந்தப் போட்டியில் நான் சரியாக விளையாடவில்லை என்று எனக்குத் தெரியும். சிறந்த வீரர்களில் ஒருவராக இருந்துவிட்டு நான் நன்றாக விளையாடாமல் போனது ஏமாற்றமாக இருக்கிறது. இந்த சூழ்நிலையில் நான் உணர்ச்சிவசத்தில் எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என நினைக்கின்றேன்”- என்றார். (எ)

## சென்னை வந்தார் டோனி



சென்னை, பெப்.28

சி. எஸ். கே. அணியின் முன்னாள் தலைவர் எம். எஸ். டோனி, சென்னைக்கு வருகை தந்துள்ளார்.

இந்தியாவில் நடைபெறும் ரி - 20 தொடரான ஐ. பி. எல்லின் 18ஆவது சீசன் இந்த வருடம் நடைபெறவுள்ளது.10 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடருக்கான அட்டவணை கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது. இந்தத் தொடர் அடுத்த மாதம் 22ஆம் திகதி தொடங்குகிறது. கொல்கத்தாவில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸை எதிர்கொள்கிறது. இதில் முன்னாள் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தனது முதலாவது ஆட்டத்தில் மார்ச் 23ஆம் திகதி சேப்பாக்கத்தில் மும்பை இந்தியன்ஸுடன் மோதவுள்ளது.

இந்தப் போட்டித் தொடருக்கு தயாராகுவதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முதல் கட்ட பயிற்சி முகாம் சென்னை நாவலூரில் உள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் உயர் செயல்திறன் மையத்தில் நேற்று வியாழக்கிழமை தொடங்கியது.

இந்த நிலையில் பயிற்சியில் கலந்து கொள்ள முன்னாள் தலைவரும், விக்கெட் காப்பாளருமான எம். எஸ். டோனி நேற்று முன்தினம் விமானம் மூலம் சென்னை வந்தடைந்தார். (எ)

## டுபாய் ஓப்பன் ரென்னிஸ்: காலிறுதியில் சிட்சிபாஸ்



டுபாய், பெப்.28

டுபாய் ஓபின் ரென்னிஸ் தொடரில் சிட்சிபாஸ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள இந்த ரென்னிஸ் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டம் ஒன்றில் கிரீஸை சேர்ந்த முன்னணி வீரரான சிட்சிபாஸ், ரஷ்யாவை சேர்ந்த கரேன் கச்சனோவுடன் மோதினார்.

இதில், முதல் 2 செட்களை ஆளுக்கு ஒன்றாக கைப்பற்றிய நிலையில் 3ஆவது செட்டை சிட்சிபாஸ் கைப்பற்றி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். இந்த ஆட்டத்தில் சிட்சிபாஸ் 7-6, 6-2 மற்றும் 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். (எ)

## ஆப்கானிஸ்தானுக்கு சச்சின் வாழ்த்து



லாகூர், பெப்.28

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணியை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் அணிக்கு சச்சின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 8ஆவது லீக் ஆட்டத்தில் வலுவான இங்கிலாந்து அணி ஆப்கானிஸ்தானை எதிர்கொண்டது.

இதில், ஆப்கானிஸ்தான் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஒமர்சாய் 5 விக்கெட்களை அள்ளினார். 177 ஓட்டங்கள் குவித்த இப்ராஹிம் சட்ரான் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் அணிக்கு இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின், தனது எக்ஸ் பக்கத்தில் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அதில், “சர்வதேச கிரிக்கெட்டில் ஆப்கானிஸ்தான் அணி நிதானமாக தொடர்ச்சியாக எழுச்சி கண்டு வருவது உத்வேகத்தைக் கொடுக்கிறது. இனிமேலும் அவர்கள் பெறும் வெற்றிகளை ஆச்சர்யம் என்று உங்களால் வர்ணிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் வெற்றியை தற்போது பொழுதுபோக்காக உருவாக்கியுள்ளார்கள். இப்ராஹிம் சுப்பரான சதமடித்தார். ஒமர்சாய் அற்புதமாக 5 விக்கெட்கள் எடுத்து ஆப்கானிஸ்தானுக்கு நினைவுகரமான வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர். நன்றாக விளையாடினீர்கள்”- என்று பதிவிட்டுள்ளார். (எ)

## சம்பியன்ஸ் தொடரிலிருந்து இங்கிலாந்து வெளியேற்றம்



லாகூர், பெப்.28

சம்பியன்ஸ் கிண்ணத்தில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் தோல்வியடைந்த இங்கிலாந்து அணி தொடரிலிருந்து வெளியேறியது.

9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது.இதில் லாகூரில் நடைபெற்ற 8ஆவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இதில், தொடர்ந்து 2ஆவது தோல்வியைத் தழுவிய இங்கிலாந்து அணி அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது. (எ)

## மெத்வதேவ் வெற்றி காலிறுதிக்கு தகுதி



டுபாய், பெப்.28

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள டுபாய் ஓபின் ரென்னிஸ் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ், பிரான்ஸ் வீரரான ஜியோவானி எம்பெட்ஷி பெரிகார்ட்டுடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மெத்வதேவ் 6-4 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை...

மயானத்தில் மின் தகன மேடை அமைப்பதற்காக அண்மையில் கிடங்கு வெட்டியபோது மனித எலும்பு எச்சங் கள் மீட்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த விடயத்தை பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றனர். இதையடுத்து கடந்த வியாழக்கிழமை நீதிவான் குறித்த இடத்துக்கு சென்று நிலைமைகளை நேரில் அவதானித்தார். இதன்போது, சட்ட மருத்துவ அதிகாரி தடயவியல் பொலிஸார், நல்லூர் பிரதேச செயலர் ஆகியோரும் உடனிருந்தனர்.

ஆய்வுகளின் பின்னர், மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்களை பகுப்பாய்வுக்கு அனுப்புமாறும் ஸ்கானர் இயந்திரம் மூலம் அந்தப் பகுதியை பரிசோதனை செய்யவும் நீதிவான் கட்டளையிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குற்றவியல்...

கடந்த அரசாங்கத்தில் எமது அரசியல் கட்சியினர் தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் உத்தரவு கேட்டபோது நீதவான் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். எனினும், அந்த எதிர்ப்புப் போராட்டத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்று விதப்புரைகளை வழங்கியிருந்தார். இதன்படி, நாங்கள் போராட்டத்தை கவனமாக முன்னெடுத்தோம். எனினும், பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அந்த இடத்துக்கு சென்று அங்கிருந்த பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளை கைது செய்திருந்தனர். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 8 முறைப்பாடுகள் செய்யயப்பட்டுள்ளன,

சம்பவம் நடைபெற்ற உடனேயே முறைப்பாடுகள் செய்யப்பட்டன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதி உடனே அங்கு வந்தார். ஆனால், பொலிஸார் அவரையும் அச்சுறுத்தினர். ஆனால் இன்றுவரையில் அது தொடர்பில் எவ்வித விசாரணைகளையும் செய்யவில்லை. எம்மிடம் ஒரு நம்பிக்கை மட்டுமே உள்ளது. எங்களுக்கு இந்த ஆணைக்குழுவிடம் மட்டுமே செல்ல முடியும். சுதந்திரமாக இந்த ஆணைக்குழுவுக்கு செயல்பட முடியாவிட்டால் என்ன செய்யலாம்? இந்த ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜெனிவா கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ளார். அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை வலுப்படுத்துவதாகக் கூறியுள்ளார். போர் களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் கூறியுள்ளார். ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. யுத்த சம்பவத்தில் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. ஆனால், அதனைத் தவிர அனைத்தையும் வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் பேசியுள்ளார்.

மனித படுகொலைகளை செய்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதைத் தவிர அனைத்தையும் கூறியுள்ளார். இவர் பலவற்றை மூடி மறைக்கின்றார் - இது மிகவும் கவலைக்குரிய விடயமே . முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இதனையே செய்தார். முறைமை மாற்றம் என்று கூறிக் கொண்டு வந்த நீங்களும் முன்னைய அரசாங்கங்களின் எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளீர்கள்.

ஜனாதிபதி தன் மீதான நம்பகத் தன்மையை பாதுகாக்க வேண்டுமாயின் அவர் இதில் தலையிட வேண்டும். எவ்வாறாயினும், கடந்த 77 வருடங்களாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். முன்னைய அரசாங்கள் வடக்கு, கிழக்கு பிரச்னைகளை எவ்வாறு பார்த்ததோ, தற்போதைய அரசாங்கமும் அதே பார்வையையே கொண்டுள்ளது - என்றார். (ஐ)

## இந்திய...

பிரதிநிதிகள் தூதரக அதிகாரிகளி டம் மனுவை கையளித்ததைத் தொடர்ந்து, மீனவர்கள் பேரணியாக சென்று யாழ். மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கும், மீனவர்களின் பிரதிநிதிகள் மனுவை கையளித்த பின்னர், வடக்கு ஆளுநரின் செயல கத்தை பேரணி அடைந்தது. ஜனாதி பதிக்கான மனுவை அதிகாரிகளிடம் வழங்கிய பின்னர், மீனவர்களின் பேரணி கடற்றொழில் அமைச்சரின் பணிம னைக்கு சென்றது.

அப்போது, அங்கிருந்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனுடன் மீனவர்கள் பேச்சு நடத்தினர். அந்தச் சமயம் பாராளுமன்ற உறுப்பினருக்கும் மீனவர்களுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது. எனினும், நிலைமையை அங்கிருந்தவர்கள் சுமுகமாக்கினர். இதையடுத்து, மனு கையளிக்கப்பட்டு - மீனவர்களின் போராட்டம் நிறைவடைந்தது.

இந்தப் போராட்டத்தில் தீவகத்தை சேர்ந்த மீனவர்கள் மற்றும் கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## தமிழ்...

நேற்றைய தினம் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவிக்கையில்,

புதுக்கடை நீதிமன்றத்தின் 9 ஆம் இலக்க அறைக்கு கொண்டுவரவிருந்த நபரை நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் 5 ஆம் இலக்க அறைக்கு கொண்டு வந்தது எவ்வாறு, குறித்த சந்தேக நபரை 5 ஆம் இலக்க அறைக்கு கொண்டு வந்த போது அங்கிருந்த நீதிவான் " ஏன் இவரை இங்கு கொண்டு வந்தீர்கள்" என்று பாதுகாப்பு தரப்பினரிடம் வினவியுள்ளார்.

புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் நீதிமன்றத்தின் உள்ளக தரப்பினர் தொடர்பு கொண்டிருக்கலாம் என்பதை அன்று குறிப்பிட்டேன். சிறைச்சாலை மற்றும் பொலிஸார் அனைவரும் ஒன்றிணைந்தே குறித்த கைதியை நீதிமன்றத்துக்கு கொண்டு வந்துள்ளார்கள்.

புலனாய்வு அதிகாரிகள் தகவல் சேகரிப்பதற்காக பொதுமக்களுடன் மக்களாக இருப்பார்கள். தற்போது பாதாள குழுக்கள் பொலிஸ் தரப்புக்குள் புகுந்துள்ளது. இதுவே பாரதூரமான பிரச்னை. பாதுகாப்பு வலயத்துக்குள் இந்தநிலைமையே காணப்படுகிறது. புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நீதிபதியின் முன்னிலையில் துப்பாக்கிச்சூட்டு பிரயோகிக்கப்பட்ட போது நீதிபதி அச்சமடைந்து ஒளிந்துள்ளார். இது கவலைக்குரியது. இதுவே இன்றைய நிலை. இவற்றை பற்றி பேசும் போது தான் எமது வாய் மூடப்படுகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு என்பன இரண்டல்ல - இரண்டும் ஒன்றே.

30 வருட கால போரே தேசிய பாதுகாப்பு செயலிழக்கக் காரணம். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை பயன்படுத்தினர். அதன் பின்னர் பல உப குழுக்கள் காணப்பட்டன.

அரச படைகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 2,136 ஆயுதங்களை ஜே. வி. பியினர் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கவில்லை. அத்துடன் அரசாங்கங்களை அச்சுறுத்துவதற்காக மக்கள் விடுதலை முன்னணி பல குழுக்களாக செயல்பட்டது. ஜே. வி. பியினர் பாதுகாப்பு அமைச்சுக்கு கையளிக்காத ஆயுதங்களையா பாதாள குழுக்கள் தற்போது பயன்படுத்துகின்றன? - என்றார். (ஐ)

# அறகலயவால் வீடிழந்தோருக்கு இழப்பீடாக 234.6 கோடி ரூபாய்!

கொழும்பு, பெப். 28

அறகலயவில் பாதிக்கப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடாக 234 கோடியே 60 இலட்சம் ரூபாயை கடந்த அரசாங்கம் வழங்கியுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன், போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக 14 ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. இதற்காக 53 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அத்துடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் சோதிடரான ஞானவதி என்ற ஞானக்காவுக்கு 28 கோடி ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, மொறட்டுவை நகர முதல்வராக இருந்த சமன்லால் பெர்னாண்டோ 7 கோடியே 30 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாயையும் அவரின் மகன் சானக பெர்னாண்டோ 18 இலட்சத்து 88 ஆயிரத்து 300 ரூபாயையும் கெஸ்பேவ நகர முதல்வராக இருந்த லக்ஷ்மன் பெரேரா 69.6 கோடி ரூபாயையும் இழப்பீடாக பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# புதிய அரசமைப்பு மூலமே இனப் பிரச்னைக்கு தீர்வு!

## மனோ எம். பி. வலியுறுத்து

கொழும்பு, பெப். 28

புதிய அரசமைப்பின் மூலமே நாட்டின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார பிரச்னைக்குத் தீர்வு கண்டதன் பின்னரே இனப்பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றும் நேற்று அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



மேலும், மக்கள் இனப்பிரச்னைக்கான தீர்வையே எதிர்பார்த்துள்ளளனர் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடாக 245 மில்லியன் ரூபா வழங்கல்!

கொழும்பு, பெப். 28

உளவுத்துறை தகவல் கிடைத்தும் ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை குறித்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைவாக, அறவிடப்பட்ட நிதியிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு 245 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகச் சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, இழப்பீடு வழங்கப்பட்டதைக் கண்காணிக்க 12 தொடர்புடைய மனுக்கள் நேற்று பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ, நீதியரசர்களான எஸ். துரைராஜா மற்றும் ஏ.எச்.எம். டி. நவாஸ் ஆகியோர் அடங்கிய நீதிமன்ற ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சட்டமா அதிபரினால் மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டது. (அ)

## மனிதாபிமான...

பொதுபல சேனா அமைப்பின் பணிமனையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

சிறை தண்டனை அனுபவித்து வந்த காலத்தில் நான் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டேன். எனது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு தினமும் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவை மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். ஆனால், சிறைச்சாலை அதிகாரிகள் வெளியிலிருந்து உணவைப் பெற்றுக் கொள்ள எனக்கு அனுமதியளிக்கவில்லை.

இதற்கு முன்னர் 4 சந்தர்ப்பங்களில் சிறைத் தண்டனை அனுபவித்தபோது நான் இவ்வாறு நடத்தப்படவில்லை. உண்மையில், இது அரசாங்கத்தின் முடிவா அல்லது சிறை அதிகாரிகளின் தன்னிச்சையான செயலா? என்னைப் போன்று சிறைச்சாலை மருத்துவமனையில் உள்ள கைதிகள் பலரும் மனிதாபிமானமற்ற முறையிலேயே நடத்தப்பட்டுகின்றனர்.

இன்று சமூக வலைத்தளங்களை அதிகமாகப் பயன்படுத்துவோர் செல்வாக்கு மிக்கவர்களாக உள்ளனர். அவ்வாறானவர்களின் அழுத்தங்கள் காரணமாகவே எனக்கான மருத்துவ தேவைகள்கூட புறக்கணிக்கப்பட்டன. கைதிகள் இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மருத்துவ தேவையுள்ள கைதிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## எங்களிடம்...

என்று கூறியிருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட செல்வம் அடைக்கலநாதன் எம். பி.,

ரெலோ அமைப்பு ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கவில்லை என்று தயாசிறி ஜயசேகர கூறுகிறார். எங்களிடம் தற்போது ஆயுதங்கள் இல்லை. நாம் பயங்கரவாதத்துக்கு துணைபோகவில்லை. பாதாள உலகக் குழுவுடன் எமக்கு தொடர்பும் இல்லை - என்று கூறினார். (ஐ)

## 25லட்சம்...

மாதாரா ஆராச்சி தெரிவித்துள்ளார். 95 ஆயிரத்து 203 கண் கருவிழிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அதிக கண் கருவிழிகள் பாகிஸ்தானுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளன. அடுத்து, எகிப்து அதிக கண் கருவிழிகளை பெற்றுள்ளது.

உள்நாட்டில் 59 ஆயிரத்து 202 கண் கருவிழிகள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. இது பார்வை இழப்பால் பாதிக்கப்பட்ட பல நபர்களின் வாழ்க்கையை மேம்படுத்தியுள்ளது என்றும் ஜனத் சமன் மாதாரா ஆராச்சி தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை குறித்து இரட்டை நிலை!

## சுட்டிக்காட்டுகிறார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, பெப். 28

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பில் ஒரு நிலைப்பாட்டையும் உக்ரைன் தொடர்பில் வேறு ஒரு நிலைப்பாட்டையும் பின்பற்றுகிறது. அது இலங்கையை வேறுமாதிரி நடத்துகின்றது தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் இதுகுறித்து தீவிர கவனம் செலுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இலங்கை குறித்து செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானமொன்றை நிறைவேற்றவுள்ளதால் இது குறித்து இப்போதே இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச அரசியல் மாற்றமடைந்துள்ளது. அமெரிக்கா உக்ரைன் - ரஷ்ய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு முயல்கின்றது. ரஷ்யர்கள் தங்கள் நோக்கங்களுக்காக தியாகம் செய்துள்ளனர். அவர்கள் நெப்போலியனை தோற்கடிப்பதற்காக தங்கள் தலைநகரத்தையே தீயிட்டவர்கள்.

பல ஐரோப்பிய தலைநகரங்கள் உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் ஜெலென்ஸ்கி குறித்து மௌனமாக உள்ளன. அவர் ஜனாதிபதி தேர்தலை நடத்தாது குறித்து மௌனமாக உள்ளன.

நாட்டில் மார்ஷல் சட்டம் நடைமுறையிலிருந்தால் பொதுத்தேர்தலை நடத்தாமலிருக்கலாம் என அந்த நாட்டின் அரசமைப்பு தெரிவிக்கின்றது. ஆனால் அரசமைப்பு ஜனாதிபதித் தேர்தல் குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களின்போது பிரிட்டன் தேர்தல்களை பிற்போட்டது. பொதுச்சபை பிரபுக்கள் சபையின் ஆதரவுடன் இது இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் வடக்கில் போரிட்டபோதும் ஜே.வி.பியின் கிளர்ச்சியின் காலத்திலும் நாங்கள் தேர்தல்களை நடத்தியுள்ளோம். 2024 இல் நாங்கள் தேர்தல்களை நடத்தினோம். ஜே.வி.பி. தற்போது ஆட்சியில் உள்ளது. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை இரட்டை நிலைப்பாடுகளை பின்பற்றுகின்றது. இலங்கையை வேறுமாதிரி நடத்துகின்றது - என்றார். (அ)

# மகாசிவராத்திரி நிகழ்வில் கலந்துகொண்டார் சஜித்!



கொழும்பு, பெப். 28

மகா சிவராத்திரியை முன்னிட்டு, கொழும்பு 06 இல் அமைந்துள்ள மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு மகா சிவராத்திரி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பங்கேற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த அழைப்பை ஏற்று நிகழ்வில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சிவபெருமானுக்காக நடைபெற்ற இந்து சமய வழிபாடுகளில் கலந்து கொண்டு ஆசியும் பெற்றுக்கொண்டார். (அ)

# இலங்கை - இந்திய ரூபாயில் வர்த்தகம் முக்கிய கட்டத்தை நோக்கி பேச்சுக்கள்

கொழும்பு, பெப். 28

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக விரிவாக்கத்தை மேற்கொள்ள இரு நாடுகளும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன், இதற்காக இலங்கை மற்றும் இந்தியாவில் பயன்படுத்தப்படும் ரூபாய்களை பயன்படுத்தவும் உத்தேசித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது அரசாங்கத்தின் காலப்பகுதியில் இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகப்பூர்வ பயணங்களின்போது, இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான வர்த்தக நடவடிக்கைகளுக்கு டொலர்களுக்கு பதிலாக இரு நாட்டு நாணயங்களை பயன்படுத்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த டிசெம்பர் மாதம் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்திலும் இந்த விடயம் தொடர்பில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

அதன் அடுத்த கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய தூதுவர் தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் இரு நாட்டு வர்த்தகத்தில் டொலர்களுக்கு பதிலாக ரூபாய்களை எவ்வாறு பயன்படுத்துவது எனக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, மத்திய வங்கியின் அதிகாரிகள், இந்திய ரிசவ் வங்கியின் அதிகாரிகள் உட்பட இருநாட்டு துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதில் பல்வேறு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதுடன், அடுத்த கட்ட கலந்துரையாடல் விரைவில் நடைபெற உள்ளது. (அ)

# அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு நாடு கடத்த மறுத்துள்ளது சிங்கப்பூர்!

கொழும்பு, பெப். 28

மத்திய வங்கி பிணைமுறிமோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை சிங்கப்பூர் இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு மறுத்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறிமோசடியுடன் தொடர்புடையவர் என குற்றம்சாட்டப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநரை நாடு கடத்துவதற்கான வேண்டுகோளை இலங்கை சட்டமாஅதிபர் திணைக்களம் விடுத்திருந்தது.

எனினும் சிங்கப்பூரின் சட்டங்களின் கீழ் இலங்கைக்கு அவரை நாடு கடத்த முடியாது என சிங்கப்பூரின் சட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலஞ்ச ஊழல் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கை தொடர்ந்து 2025 பெப்ரவரி 25ஆம் திகதி முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் நீதிமன்றில் ஆஜராகவேண்டும் என கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி வழக்கு தொடர்பில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைக் கைது செய்யுமாறு, கொழும்பு நிரந்தர ட்ரயல் - அட் - பார் பெஞ்ச் ஏற்கனவே, இன்ரர்போல் மூலம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது அநுரகுமார திஸாநாயக்க அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டுவருவேன் என தெரிவித்திருந்தார்.இது தனது முன்னுரிமை என அவர் குறிப்பிட்டிருந்தார். (அ)

# வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி சமூக ஊடகங்களில் பொய் விளம்பரம்

கொழும்பு, பெப். 28

நீண்ட கால நிலையான வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி சமூக ஊடகங்கள் மூலம் பகிரப்படும் விளம்பரம் பொய்யானது என்று தொழில் அமைச்சு விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற விளம்பரங்களின் ஒரே நோக்கம் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் வங்கிக் கணக்கு விவரங்களைத் திருடுவது என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இதுபோன்ற போலி விளம்பரங்களால் மக்கள் ஏமாறவேண்டாம் என்றும் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# துப்பாக்கிச்சூடுகள் குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?

## சபையில் சஜித் கேள்வி

கொழும்பு, பெப். 28

நாட்டில் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் புதிய ஆண்டின் இரண்டு மாதங்களில் 17 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட படுகொலைகளின் வளர்ந்து வரும் செல்வாக்கு பொதுமக்களின் அச்சங்களை அதிகரித்துள்ளது.

மேலும், நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்வதுடன் சில கொலைகள் குற்றவியல் ஆதாரங்களை அழிக்கும் முயற்சிகளாக இருக்கலாம்.

வன்முறை குற்றங்களுக்கு எதிராக உரிய நடைமுறைகள் குறித்து அரசாங்கம் உறுதியளித்தபோதிலும், காவலில் உள்ள சந்தேக நபர்களைக் கையாள்வதற்கான பொலிஸாரின் நெறிமுறைகள் சந்தேகத்துக்குரியன.

பொலிஸாரின் சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட நடைமுறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். குற்றவியல் வலையமைப்புகளின் அதிகரிப்பு குறித்த அதிகாரிகள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

பொலிஸ் தலைவர் மற்றும் பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் இடையே ஏற்படக்கூடிய மோதலை விசாரிக்கவேண்டியது அவசியம் - என்றார். (அ)

# பாராளுமன்ற தேர்தலின் பின் நாட்டில் வெறுப்புப் பேச்சு சதவீதம் அதிகரிப்பு!

## ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 28

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து இலங்கையில் வெறுப்புப்பேச்சு 113 சதவீதம் அதிகரித்துள்ளதாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

பாலின அடிப்படையிலான வெறுப்புப்பேச்சு 159 சதவீதம் அதிகரித்தமையால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து இனம் அல்லது மத ரீதியில் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு 8 மடங்கு அதிகரித்ததாக தெரிவித்துள்ளது.

அதேநேரம் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் உள்ளூர் அமைப்புகளின் தீவிர முயற்சிகள் மூலம், சிறுபான்மையினருக்கு எதிரான நிகழ்நிலை பிரசாரங்கள் 2021 ஆம் ஆண்டு முதல் குறைந்தன.

இருப்பினும், மதங்கள் மற்றும் பெண்களை இலக்குவைத்து குறிப்பாக பொது நிகழ்வுகளில் ஈடுபடுபவர்களை அல்லது பொதுவெளியில் கருத்துகளை வெளியிடுபவர்களுக்கு எதிரான வெறுப்புப்பேச்சு தொடர்வதாக ஐக்கிய நாடுகள் சபை அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org